

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 28.01.2026

# அது ஏற்கனவே தோற்ற கூட்டணிதான்!

அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணி மீண்டும் அமைந்ததை சில ஊடகங்கள் ஏதோ புதிய பேரொளியைப் போல பூதாகரமாகக் காட்டுகின்றன. இது ஏற்கனவே பியூஸ் போன பல்புதான் என்பதை அவர்களது கடந்த கால தோல்வி வரலாறு சொல்லும்.

**2019 நாடாளுமன்றத் தேர்தலிலும், 2021 சட்டசபைத் தேர்தலிலும் அ.தி.மு.க.வும் பா.ஜ.க.வும் கூட்டணி அமைத்துத்தான் போட்டியிட்டன. கூட்டணியாகத்தான் தோற்றன. எனவே, இவர்கள் சேர்ந்திருந்தாலும் தோல்விதான். பிரிந்து நின்றாலும் தோல்விதான்.**

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க. கூட்டணி 47 விழுக்காடு வாக்குகளைப் பெற்றது. அ.தி.மு.க. கூட்டணி 23 விழுக்காட்டையும், பா.ஜ.க. கூட்டணி 18 விழுக்காட்டையும் பெற்றது. அ.தி.மு.க.வின் விழுக்காட்டையும் பா.ஜ.க. விழுக்காட்டையும் கூட்டினால் 41 விழுக்காடு தான் வருகிறது. 47 ஐ தாண்டவில்லை. இதுகூட, தோற்ற அந்த இரண்டு கட்சிக்கும் தெரியவில்லை.

நாடாளுமன்றத் தேர்தல் வெற்றியை சட்டமன்றத் தொகுதி வாரியாகக் கணித்து அப்போதே 'தி இந்து' நாளிதழ் ஒரு கட்டுரை தீட்டியது.

"222 சட்டமன்றத் தொகுதி வாரியாக தி.மு.க. கூட்டணி அதிக வாக்குகள் பெற்றுள்ளது" என்று 'தி இந்து' ஆங்கில நாளிதழ் அதில் குறிப்பிட்டது.

**அந்தக் கட்டுரையில், நடந்து முடிந்த நாடாளுமன்ற தேர்தலில் 222 சட்டமன்றத் தொகுதி வாரியாக தி.மு.க. கூட்டணி அதிக வாக்குகள் பெற்றுள்ளது என்றும், 222 சட்டமன்ற தொகுதிகளில் மற்ற கட்சிகளை காட்டிலும் தி.மு.க. கூட்டணிக்கே அதிக வாக்குகள் கிடைத்துள்ளது என்றும், 32 மக்களவை தொகுதிகளை உள்ளடக்கிய 192 சட்டமன்றத் தொகுதிகளில் முழுமையாக தி.மு.க. கூட்டணியே அதிக வாக்குகளை பெற்று சாதனை படைத்துள்ளது என்றும் சொல்லப்பட்டது.**

திருவள்ளூர், தென்சென்னை, அரக்கோணம், பெரம்பலூர், கரூர், திருச்சி, கோவை, நாமக்கல், நீலகிரி, மதுரை, தென்காசி, தூத்துக்குடி மக்களவை தொகுதிகளில் அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலும் அதிக வாக்குகளைத் தி.மு.க. கூட்டணி பெற்றுள்ளது என்றும் 'தி இந்து' சொல்லி இருந்தது.

மக்களவைத் தேர்தல் வாக்கு விவரங்களின்படி 8 சட்டசபைத் தொகுதிகளில் மட்டுமே அ.தி.மு.க. முன்னணியில் இருக்கிறது. 3 தொகுதிகளில் பா.ம.க. அதிக வாக்குகளைப் பெற்றுள்ளது. பா.ஜ.க. எந்த சட்டமன்றத் தொகுதியிலும் கூடுதல் வாக்குகளை வாங்கவில்லை. எனவே, தேர்தலுக்கு முன்னதாகவே அவர்களது தோல்வி முகத்தை நாம் எளிதில் கணிக்கலாம்.

**தமிழ்நாட்டைப் பொறுத்தவரை பா.ஜ.க.வுக்கு எதுவுமே இல்லை என்பதும் கண்ணால் பார்த்துக் கொண்டிருக்கும் உண்மை ஆகும்.தமிழ்நாட்டில் பா.ஜ.க.வின் வரலாறு என்ன?**

1984 நாடாளுமன்றத் தேர்தலில் ஒரு தொகுதியிலும் 1989 தேர்தலில் 3 இடங்களிலும், 1991 தேர்தலில் 15 இடங்களிலும், 1996 தேர்தலில் 37 இடங்களிலும் போட்டியிட்டு, ஒரு தொகுதியில்கூட தமிழகத்தில் பா.ஜ.க. வெற்றி பெறவில்லை. பா.ஜ.க. முதன்முறையாக 1996 சட்டசபைத் தேர்தலில் ஒரு இடத்தில் வென்று, சட்டசபைக்குள் நுழைந்தது.

1998 நாடாளுமன்றத் தேர்தலில் 5 தொகுதிகளை பா.ஜ.க.வுக்கு ஒதுக்கினார் ஜெயலலிதா. 3 தொகுதிகளில் பா.ஜ.க. வென்றது. 1999 நாடாளுமன்றத் தேர்தலில் திமுகவுடன் கூட்டணி அமைத்தது பா.ஜ.க.. அந்த கூட்டணியில் 6 தொகுதிகள் ஒதுக்கப்பட, 4 இடங்களில் பா.ஜ.க. வென்றது.

2001 சட்டசபைத் தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் பா.ஜ.க. 21 தொகுதிகளில் போட்டியிட்டு, 4 இடங்களில் வென்றது. 2004 நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க.வுக்கு 7 தொகுதிகளை ஒதுக்கினார் ஜெயலலிதா. அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணி 40 தொகுதிகளிலும் படுதோல்வி அடைந்தது.

2006 சட்டசபைத் தேர்தலில் தனித்து போட்டியிட்டது பா.ஜ.க.. 225 தொகுதிகளில் போட்டியிட்டு, 221 இடங்களில் டெபாசிட் இழந்தது. 2009 நாடாளுமன்றத் தேர்தலில் எந்த தொகுதியிலும் பா.ஜ.க. வெற்றி பெறவில்லை. 2011 சட்டசபைத் தேர்தல் 200க்கும் அதிகமான இடங்களில் பா.ஜ.க. தனி அணியாகப் போட்டியிட்டது. 198 தொகுதிகளில் டெபாசிட்டை இழந்தது.

2016 சட்டசபைத் தேர்தலில் 188 இடங்களில் போட்டியிட்டு 180 தொகுதிகளில் டெபாசிட் இழந்தது பா.ஜ.க.. 2019 நாடாளுமன்றத் தேர்தலில் அ.தி.மு.க.வுடன் கூட்டணி அமைத்து 5 தொகுதிகளில் போட்டியிட்டது பா.ஜ.க. இந்தக் கட்சியும் முழுமையாகத் தோற்றது. அ.தி.மு.க. ஒரே ஒரு தொகுதியில் மட்டுமே வென்றது.

2021 சட்டசபைத் தேர்தலில் அ.தி.மு.க. கூட்டணியில் போட்டியிட்ட பா.ஜ.க. 4 இடங்களில் மட்டுமே வென்றது. இதுதான் பா.ஜ.க.வின் தோல்விச் சரித்திரம் ஆகும்.

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க. கூட்டணி 21 தொகுதிகளில் டெபாசிட் இழந்துள்ளது. அதிமுக கூட்டணி 8 தொகுதிகளில் டெபாசிட் இழந்துள்ளது.

ஏற்கனவே சேர்ந்து பலமுறை தோற்றவர்கள், இப்போது மீண்டும் சேர்ந்து தோற்கப் போகிறார்கள். அதை நாம் பார்க்கப் போகிறோம்.

**2019 நாடாளுமன்றத் தேர்தல்,**

**2019 சட்டமன்ற இடைத்தேர்தல்,**

**2019 ஆம் ஆண்டில் 9 மாவட்ட ஊரக உள்ளாட்சித் தேர்தல்,**

**2021 ஊரக உள்ளாட்சித் தேர்தல்,**

**2021 தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல்,**

**2022 நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல்,**

**2023 ஈரோடு இடைத்தேர்தல்,**

**2024 நாடாளுமன்றத் தேர்தல்,**

**2024 விக்கிரவாண்டி சட்டமன்ற இடைத் தேர்தல் ஆகிய அனைத்துத் தேர்தலிலும் தோற்றவர்தான் பழனிசாமி. அவர் தமிழ்நாட்டு மக்களால் மட்டுமல்ல அ.தி.மு.க. தொண்டர்களாலும் நிராகரிக்கப்பட்டவர். எந்தத் தகுதியும் அற்றவர் அவர். இவை அனைத்தையும் நடைபெற உள்ள தேர்தல் முடிவுகள் மெய்ப்பிக்கும்.**




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (27.01.2026) நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில், உலக மகளிர் உச்சி மாநாடு 2026 தொடக்க விழாவில், தமிழ்நாட்டில் தொழில் துறைகளில் பெண்களின் பங்களிப்பை மேம்படுத்துவதற்கான ஒத்துழைப்பை வலுப்படுத்தும் வகையில், UNDP, IPE Global மற்றும் பல்வேறு தொழில் நிறுவனங்கள் உள்ளிட்ட அமைப்புகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. இந்த நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், திருமதி கீதாஜீவன், மா.சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் பி. செந்தில் குமார், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை முதன்மைச் செயலாளர் திருமதி ஜெயஸ்ரீ முரளீதரன், தமிழ்நாடு மகளிர் வேலைவாய்ப்பு மற்றும் பாதுகாப்புத் திட்ட இயக்குநர் திருமதி ஆஷா அஜித், உலக வங்கி மண்டல இயக்குநர் செம்மெட்டே, ஐ.நா. பெண்கள் அமைப்பின் பிரதிநிதி திருமதி காந்தா சிங், மொரிசியஸ் முன்னாள் தலைமை கொறடா திருமதி நவீனா ரம்யாத், TAFE நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி மல்லிகா ஸ்ரீனிவாசன், தொழில்துறை, கல்வித்துறை, பெருநிறுவன சமூகப் பொறுப்பு (CSR) பங்காளர்கள், பல்வேறு சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.01.2026) நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில், உலக மகளிர் உச்சி மாநாடு 2026 தொடக்க விழாவில், மகளிர் விடியல் பயணம் மேற்கொள்ளும் வகையில் பத்து Pink பேருந்துகள், மகளிர் பாதுகாப்பிற்காக பயன்படுத்திடும் வகையில் மகளிர் காவலர்களுக்கான வாகனங்கள், மகளிருக்கான Pink ஆட்டோக்கள் ஆகியவற்றின் சேவைகளை கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், திருமதி கீதாஜீவன், மா.சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், மற்றும் துறை சார்ந்த அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## தி.மு.க. தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழு சுற்றுப்பயண விவரம் (27.01.2026)





சென்னை, ஜன.28-

தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, 2026 சட்டப்பேரவைத் தேர்தலுக்கான திமுக தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழுவினர் கனிமொழி கருணாநிதி எம்.பி தலைமையில் தமிழ்நாடு முழுக்க சுற்றுப் பயணம் செய்து மக்களின் பரிந்துரைகளையும், கோரிக்கைகளையும் பெற்று வருகின்றனர்.

கடந்த 19.01.2026 அன்று தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களுக்கான கருத்துக் கேட்பு கூட்டம் ஓசூரில் நடைபெற்ற நிலையில், நேற்று (27.01.2026) டெல்டா மாவட்டங்களுக்கான கருத்துக் கேட்பு கூட்டம் காலையில் தஞ்சாவூரிலும், மாலை திருச்சியிலும் நடைபெற்றது.

தஞ்சையில் நடந்த கூட்டத்தில் மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களிலிருந்து விவசாய சங்கங்கள், தொழிற்சங்கங்கள், மீனவ சங்கங்கள், சிறு, குறு தொழில் நிறுவனங்களின் கூட்டமைப்பு, சாம்பர் ஆப் காமர்ஸ் உள்ளிட்ட 75 க்கும் மேற்பட்ட சங்கங்கள் பங்கேற்று 300க்கும் மேற்பட்ட கோரிக்கைகளை அளித்தனர்.

திருச்சியில் நடந்த கூட்டத்தில் திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், அரியலூர், புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களிலிருந்து 100க்கும் மேற்பட்ட சங்கங்கள் கலந்து கொண்டு அவர்களின் கோரிக்கைகளை வழங்கினர். இக்கூட்டங்களில் பெண்கள், இளைஞர்கள் உள்ளிட்ட பொதுமக்களும் திரளாக கலந்து கொண்டு அவர்களது பரிந்துரைகளை வழங்கி வருகின்றனர்.

பரிந்துரைகள் பெறத் தொடங்கி 24 நாட்களில் இதுவரை தொலைபேசி, வாட்ஸப், மின்னஞ்சல் மற்றும் AI வழியாக 59,486 பரிந்துரைகளும், கோரிக்கைகளும் பெறப்பட்டுள்ளன.

வரும் ஜனவரி 30ஆம் தேதியன்று இக்குழுவினர் திருநெல்வேலி, இராமநாதபுரம் ஆகிய ஊர்களில் சுற்றுவட்டார மாவட்டங்களைச் சேர்ந்த அமைப்பினரை சந்திக்கவுள்ளனர்.



ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட இரண்டாம்கட்டளை ஊராட்சி தி.மு.க சார்பில் குன்றத்தூர் வடக்கு ஒன்றிய செயலாளர் ஏ.வந்தேமாதரம் ஏற்பாட்டிலும் ஊராட்சி மன்றத் தலைவர் சாந்தாதேவி சுகுமார் தலைமையிலும் நடைபெற்ற திராவிட பொங்கல் விழாவில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்து கொண்டு கோலப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் மற்றும் 2,000 பொதுமக்களுக்கு பொங்கல் பரிசை வழங்கினார். அருகில் ஒன்றியக்குழு தலைவர் சரஸ்வதி மனோகரன், துணைத் தலைவர் உமா மகேஸ்வரி வந்தேமாதரம் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.